DMCUMJM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 151 /2023, Kunnam P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அண்ணாதுரை | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | தங்கவேல் | Occupation | : | விவசாயம் |
| Village | : | வசிஷ்டபுரம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 60/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025 | | | | | |

2 எதிரி ஆஜர். 1,3 எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜரில்லாத 2 எதிரிகளையும் தெரியும். கடந்த 2023ம் ஆண்டு ஒருநாள் காலை ஆடுகளை காட்டிற்கு மேய்க்க அழைத்து சென்றுவிட்டேன். திரும்ப வந்து பார்த்தபோது எங்களது காட்டில் எதிரிகளின் 10 ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தது. நான் அதை கேட்டபோது எதிரிகள் என்னிடம் சண்டை போட்டார்கள். அதன் தொடர்ச்சியாக இரவு 10 மணியளவில் எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியை பார்த்து உன்னை நான் வைத்திருந்தேன் என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எனது மனைவி அமுதா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.

2. நான் காட்டில் தங்கி இருந்த நான் வீட்டிற்கு சென்று எதிரிகளிடம் கேட்டபோது செல்வமுருகன் ஸ்டீல் கம்பியால் எனது வலது கையில் அடித்துவிட்டார். தமிழ்செல்வன் கட்டையால் தலையில் குத்தினார். பின்னர் நான் மயக்கம் வந்து விழுந்துவிட்டேன். பின்னர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது குன்னம் போலிசார் என்னிடம் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. எனது வீட்டிற்கு பக்கத்தில் கொளஞ்சி, கந்தசாமி, லோகு, பூங்கோதை, கவிதா, ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்தில் அங்குள்ள அனைவரும் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இரவு 10 மணி என்பதால் இருட்டாக இருக்கும் என்றால் அரசாங்கத்தால் போடப்பட்ட லைட் வெளிச்சம் இருந்தது. போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கியபோது எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் படித்து காண்பித்துதான் கையெழுத்து வாங்கினார்கள்.

2. தமிழ்செல்வன் என் தலையில் குத்தியதாக புகார் மனுவிலோ, போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை, மருத்துவரிடம் சொல்லியுள்ளனே். மருத்துவரிடம் சம்பவம் வசிஷ்டபுரம் மெயின்ரோட்டில் நடந்ததாக சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எனது வீட்டிற்கு முன்னால் நடந்தது என்று சொன்னேனா என்றால் ஆம் சொன்னேன். நான் மருத்துவரிடம் நடுமண்டையில், வலது முழங்கை மடிப்புக்கு கீழ் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

3. நான் மருத்துவமனையில் சேர்ந்து மறுநாள் போலிசார் மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதன் பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் போதுமான முகாந்திரம் இல்லாததால் நான் கொடுத்த முதல் புகார் வாக்குமூலத்தை போலிசார் மறைத்துவிட்டு நடக்காத சம்பவத்தை மிகைப்படுத்தி போலிசாரே 2-வது புகார் வாக்குமூலம் எதிரிகளுக்கு எதிராக தயார் செய்து அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்து காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றாலும், அ.த.சா.ஆ1 புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது அல்ல என்றாலும், அவை நம்பதகுந்தது அல்ல என்றாலும் சரியல்ல.

4. புகார் எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்து வருவதாலும் இரவு நேரத்தில் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கால் வழுக்கி மல்லாக்க கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினை கொண்டு எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்திற்கு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கட்டையாலோ, இரும்பு கம்பியாலோ அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 151 /2023, Kunnam P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமுதா | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | அண்ணாதுரை | Occupation | : | விவசாயம் |
| Village | : | வசிஷ்டபுரம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 45/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025 | | | | | |

2 எதிரி ஆஜர். 1,3 எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரிகளையும் எனக்கு தெரியும். 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை எதிரிகளின் ஆடு எங்கள் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது காட்டிற்கு சென்று திரும்பி வந்த எனது கணவர் எதிரிகளிடம் இது பற்றி கேட்டார். பிறகு இதன் தொடர்ச்சியாக அன்றைய தினமே இரவு 8 மணியளவில் இது பற்றி எனது மகனிடம் போனில் தகவல் தெரிவித்தேன். 1–ம் எதிரி தேவிடியா, குச்சிகாரி, உன்னை வைத்திருந்தேன் என்று அசிங்கமாக திட்டினார்.

2. பிறகு இதுபற்றி காட்டுக்கொட்டகையில் தங்கியருந்த எனது கணவருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் எனது கணவர் அங்கிருந்து வந்து எனது மனைவியை எவ்வாறு திட்டலாம் என்று எதிரிகளிடம் கேட்டார். 1–ம் எதிரி செல்வமுருகன் ஸ்டீல் கம்பியால் எனது கணவரின் வலது கையில் அடித்துவிட்டார். 2–ம் எதிரி தமிழ்செல்வன் கட்டையால் எனது கணவரின் தலையில் அடித்து ரத்தகாயத்தை ஏற்படுத்திவிட்டார். பின்னர் காயம் பட்ட எனது கணவரை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். வழக்கு சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. நான் எனது வீட்டிற்குள் இருந்தபோது எதிரி அவரது வீட்டில் இருந்து அசிங்கமாக திட்டினார் என்றால் சரிதான். நான் எனது கணவரை மருத்துவமனையில் சேர்த்த அன்றே போலிசார் மருத்துவமனையில் வந்து

DMCUM COURT KUNNAM

விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் எனது கணவருடன் இருந்தபோது மருத்துவமனை வந்த போலிசார் எனது கணவரை விசாரித்தார்கள், அதன் பிறகு என்னையோ எனது கணவரையோ விசாரிக்கவில்லை. எனது வீட்டிற்கு அருகில் கொளஞ்சி, கந்தசாமி, லோகு, பூங்கோதை, கவிதா, ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களும் அந்த வீடுகளில் வசிக்ககூடிய மற்ற நபர்களும் சம்பவ சமயத்தில் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான்.

2. போலிசார் மருத்துவமனையில் வாக்குமூலம் வாங்கும்போது மதியம் 12 மணி. நான் தற்போது நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன விபரங்கைள தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகளின் ஆடுகள் எங்கள் வயலில் விட்டுவிடுவதால் எங்களுக்குள் அடிக்கடி வாய்தகராறு வரும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்பதால் இருட்டாக இருந்தது. எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வருவதால் எனது கணவர் இரவு நேரத்தில் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கால் வழுக்கி மல்லாக்க கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினை கொண்டு எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது கணவரும் நானும்சேர்ந்து கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்திற்கு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கட்டையாலோ, இரும்பு கம்பியாலோ அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCJMCOURT, KUNNAM

DMCUMJCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 151 /2023, Kunnam P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துவேல் | Nationality | : | - |
| Father/ Husband Name | : | தங்கவேல் | Occupation | : | விவசாயம் |
| Village | : | வசிஷ்டபுரம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 75 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025 | | | | | |

2 ம் எதிரி ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும்போடுவேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை நான் 03.06.2023 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் குன்னம் போலிசார் வசிஷ்டபுரத்தில் உள்ள அ.சா.1 ன் வீட்டிற்கு முதல்நாள் இரவு அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக விசாரிக்க வந்தனர்.

2. யார் பக்கத்தில் குடியிருந்தார்கள் என்று விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். என்னுடன் செல்வமுருகன் என்பவரும் கையெழுத்து செய்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். பார்வை மகசர் **அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. அ.சா.1 எனது உடன்பிறந்த தம்பி ஆவார். எனது வீடு எதிரிகள் வீட்டிற்கு பின்புறம் உள்ளது. அந்த நேரத்தில் நான் எதற்காக சம்பவ இடத்திற்கு சென்றேன் என்ற விபரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் வரைந்த படத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 1 கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்டு கொடுத்த படத்தை போலிசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிலலை என்றாலும், அவர்களாகவே வேறு பேப்பரை தயார் செய்து

அதில் எனது கையொப்பத்தை போட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM